# ஆண்டறிக்கை - 2016



## தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

## பேராதனை

**இலங்கை தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் நலனோம்புகைக்குமான நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

வருடாந்த அறிக்கை – 2016ம் வருடம்

இலங்கையில் தாவரவியல் பூங்காக்களை மேம்படுத்துவதற்கும் நலனோம்புகைக்குமான நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்று 1995.12.15 ஆம் திகதியன்று அப்போதிருந்த விவசாய, காணி வனவள அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை பரிசீலனை செய்து 1996.02.07 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்கா அபிவிருத்தி மற்றும் நலனோம்புகைக்கான நம்பிக்கை பொறுப்பு நிதியமொன்றை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் வருடாந்தம் 25% தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் நலனோம்புகைக்குமான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வருமானமொன்றாக வரவு வைக்கப்படுகின்றது. இதற்காக ஒவ்வொரு வருடமும் திறைசேரி அங்கீகார மதிப்பீட்டுத் தலைப்பின் 22.01 நிகழ்ச்சித் திட்ட மூலதன தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நிதியத்தின் செலவை ஈடு செய்வதற்குத் தேவையான நிதி தேவைக்கேற்றவாறு திணைக்களத்தோடு இணைந்த நிதியத்தினூடாகப் பெற்று வருட இறுதியில் ஈடுசெய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக நிதியத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கான தேவையான பணிகளை மேற்கொள்வதற்கும் இதன் மூலம் வழி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியம் பொறுப்பு சபையொன்றினால் நிருவகிக்கப்படுவதோடு அந்தப் பொறுப்பு சபையின் தலைவராக நிரல் அமைச்சின் செயலாளரும் பொறுப்பு நிதிய சபையின் செயலாளராக தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் பொறுப்பு நிதிய சபையின் உறுப்பினர்களாக திறைசேரியின் வரவு செலவுத்திட்டப் பணிப்பாளரும் செயற்படுகின்றனர்.

**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம்**

| | | |
|---|---|---|
| **1. நிதியத்தின் பெயர்** | : | **இலங்கை தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி மற்றும் நலனோம்புகைக்கான நிதியம்** |
| **2. தன்மை** | : | **தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள், நலனோம்புகை நடவடிக்கைகள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெழும் நடவடிக்கைகளுக்கான நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்** |
| **3. உரிய சுற்றறிக்கை** | : | **I. நிதியத்தை ஆரம்பித்தல் - 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிதியக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம்**<br>**II. கணக்கு வைத்தலும் கணக்கு அறிக்கையிடலும் திறைசேரி சுற்றறிக்கை 1977 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 836 ஆம் இலக்க சுற்றறிக்கையும் 2016.12.22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை PF/423க்கு ஏற்ப** |

4. ஆரம்பிக்கப்பட்ட திகதி : 1996 திசெம்பர் 20 ஆம் திகதி

5. அலுவலகம் : பேராதனை தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பிரதான அலுவலகம்.

6. வங்கி : பேராதனை இலங்கை வங்கி ; கணக்கிலக்கம் 0007040848

7. நிதியத்தின் நோக்கங்கள் :

- ✓ தாவரவியல் பூங்காக்கள் பற்றி காணப்படுகின்ற புகழுருவை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மேலும் சிறந்த முறையில் வைத்துக்கொள்வதற்கு நடடிவடிக்கை எடுத்தல்.
- ✓ சூழல், கல்வி மற்றும் மூலிகை பற்றிய தற்போதுள்ள பாதுகாப்பு தொடர்பில் அர்த்தபுஸ்டியான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- ✓ தாவரவியல் பூங்காக்களில் தொழிலில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளின் விஞ்ஞான ரீதியான அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துதலும் உரிய நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ரீதியான ஆதரவை அளித்தலும்.
- ✓ தாவரச் சேகரிப்பு பற்றிய வளர்ச்சி ரீதியான நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளுதல்.
- ✓ தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழல், கல்விப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துகை நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்ப செயற்பாடுகளை மேம்படுத்துவதும் அதற்கு நிதி உதவி அளித்தலும்.
- ✓ விஞ்ஞானிகளுக்கும் தாவரவியல் பூங்காக்களுக்கு விஜயம் செய்கின்றவர்களுக்கும் தேவையான எந்தவொரு அவசர நிர்மாணப் பணிகளையும் பொறுப்பேற்றல்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெழும் நிதி ஏற்பாடுகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.

## 2016 ஆம் ஆண்டில் நிதியத்தின் நிதி முன்னேற்றம்

| | | | |
|---|---|---|---|
| 2016-01-01 ஆம் திகதியன்று நிலுவை | = | ரூபா | 145,397,654.65 |
| **சேர்ப்பு ;** | | | |
| 2016 ஆம் ஆண்டில் வருமானம் (குறைத்தல் | = | ரூபா | 148,540,186.28 |
| | | | -------------------- |
| மொத்தம் | = | ரூபா | 293,937,840.93 |
| **குறைப்பு ;** | | | |
| 2016 ஆம் ஆண்டில் செலவு (பற்று) | = | ரூபா | 139,957,695.60 |
| -------------------- | | | |
| 2016.12.31 ஆம் திகதியில் திறைசேரி மீதி | = | ரூபா | **153,980,145.33** |
| | | | =========== |

* (இந்த நிலுவை பெயரளவிலான நிலுவையாகும்)

**நிதியத்தின் பிரதான நோக்கமான இலங்கையின் தாவரவியல் பூங்காக்கள் பற்றிய புகழுருவை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மேம்படுத்தும் நோக்குடன் நிதியத்தின் நிதி ஏற்பாடுகளைப் பெற்று 2016 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.**

- தாவரவியல் விஞ்ஞான ஆராய்ச்சியின் கீழ் உள்நாட்டுத் தாவரப் பாதுகாப்பு மற்றும் தாவரங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக தேசிய தாவரக்கயத்தினால் முறைமையான நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி நிதியத்தின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி, இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட – (இலங்கையின் அழகான காட்டுப் பூக்கள்) Beautiful Wild Flowers in Sri Lanka என்ற புத்தகம் புதிய தகவல்களை உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் தாவரவியல் பூங்காக்களின் விற்பனையகங்களில் ரூபா 850/- க்கு விற்பனை செய்யப்படுவதோடு அதன் வருமானம் நிதியத்தின் வருமானமாக கணக்கிடப்படுகின்றது.




“Wild Flowers of Sri Lanka” புத்தகம்

- தாவரவியல் பூங்காக்களில் பணிபுரியும் விஞ்ஞானிகளின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக இவ்வருடத்தில் தேசிய தாவரக்கயத்தின் பிரதான அலுவலர் ஐக்கிய நாடுகளில் கிவ் தாவரவியல் பூங்காவில் இடம்பெற்ற "PLANT TAXONOMY IDENTIFICATION AND DUTIES OF THE NATIONAL HERBARIUM" என்ற பயிற்சி செயலமர்வில் கலந்து கொண்டார்

- தாவரவியல் பூங்காக்களை பார்வையிட வருகின்ற பார்வையாளர்களது தாவரவியல் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதற்காக தேசிய தாவரக்கயத்தினால் பின்வரும் விளக்கப்படங்கள் இரண்டு அச்சிடப்பட்டு ஒன்று ரூபா 100/- என்ற அடிப்படையில் விற்பனைக்காக தாவரவியல் பூங்காக்களின் விற்பனைக் கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த வருமானம் தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் மேலதிக வருமானமொன்றாக வரவு வைக்கப்படுகின்றது.







1. " ENDEMIC FLOWERING PLANTS OF SRI LANKA"

2. " BEAUTIFUL ORCHIDS OF SRI LANKA"

- இதற்கு மேலதிகமாக பூச்செடியியல் ஆராய்ச்சிப் பிரிவினால் பூ வளர்ப்போரது அறிவை மேம்படுத்துவதற்காக மலர்ச் செய்கை பற்றிய பின்வரும் வழிகாட்டல் புத்தகங்கள் இவ்வருடத்தில் அச்சிடப்பட்டு விற்பனைக்காக தாவரவியல் பூங்காக்களின் விற்பனைக் கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இந்த வருமானமும் தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்தின் மேலதிக வருமானமொன்றாக நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

1. ட்ரெசீனா சன்ட்ரியானா பூச்செடிச் செய்கை பற்றிய வழிகாட்டல் புத்தகம்

2. ஓக்கிட் பூச்செடிச் செய்கை பற்றிய வழிகாட்டல் புத்தகம்

- தாவரவியல் பூங்காக்களை அழகாக வைத்துக்கொள்வதற்காகவும் தாவரவியல் பூங்காக்கள் வனஜீவராசிகளுக்கு நட்பான சூழலொன்றை கொண்டுள்ளதாலும் அண்மைக்காலங்களிலிருந்து தாவரவியல் பூங்காக்களில் வனவிலங்குகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் கீழ் சுற்றுலாப் பயணிகளின் உளங்கவரும் வண்ணாத்திப் பூச்சிகள் பற்றிய “ The Butterfly Fauna Of Sri Lanka” என்ற 05 புத்தகங்களை கொள்வனவு செய்து தாவரவியல் பூங்காக்களின் நூலகங்களின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய தாவரவியல் பூங்காக்கள், வனஜீவராசிகள் மற்றும் பறவையினங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு தினமின செய்திப் பத்திரிகையில் “வனதிவிய - வன வாழ்வு” எனும் பத்திரிகை இணைப்பிதழொன்றை மாதாந்தம் வெளியிடுவதோடு தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்தினூடாக அதற்கான செலவின் ஒரு பகுதிக்கான பங்களிப்பு கடந்த வருடத்திலிருந்து வழங்கி வைக்கப்படுகின்றது.

- அலுவலர்களதும் ஊழியர்களதும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோபாவம் போன்றவற்றை விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தேவைப்படுவதோடு அவ்வாறான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்தினூடாக நிதியேற்பாடு செய்யப்படுகின்றது.

**<u>நிதி ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள்</u>**

- விளைதிறன்மிக்க உள்ளகக் கணக்காய்வு பற்றிய இரு நாள் செயலமர்வு
- இங்கிலாந்தின் “கிவ் பூங்கா” வில் நடைபெற்ற பயிற்சிச் செயலமர்வு
- விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் இடம்பெற்ற “வருடாந்த உணவு மற்றும் பூச்செடியியல் தாவரங்களின் முக்கியத்துவத்திற்கான தாவர வளர்ப்பு உத்திகள்” செயலமர்வு

## 2016 ஆம் ஆண்டில் நிதியத்தின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி செயற்பாடுகள்


**பேராதனை தாவரவியல் பூங்கா**

- பார்வையாளர்கள் வசதியாகவும் பாதுகாப்பாகவும் பூங்காவைப் பார்வையிடுவதற்காக உள்ளக வீதித் தொகுதியை நவீனமயப்படுத்தியதோடு அதற்காக தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்திலிருந்து ரூபா 13.3 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டது.



**வீதிகளுக்கு காபட் இடப்பட்டு மேம்படுத்தப்பட்டிருக்கும் காட்சி**

- பார்வையாளர்கள் ஓய்வெடுப்பதற்காக இவ்வருடத்தில் புதிதாக 3 வசந்த இல்லங்கள் தாவரவியல் பூங்காவில் அமைக்கப்பட்டதோடு அதற்கு 3.8 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது.




**நிர்மாணிக்கப்பட்ட வசந்த இல்லமொன்று**

- பார்வையாளர்களுக்கு வசதியளிக்கும் திட்டத்தின் கீழ் பேராதனை தாவரவியல் பூங்காவின் கெ.ஃபடேரியா உணவகம் 2016 ஆம் ஆண்டில் நவீனமயப்படுத்தப்பட்டதோடு, அதற்கு தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்திலிருந்து நிதியேற்பாடு செய்யப்பட்டது. இதற்காக சுமார் 2.5 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

- மூன்று மில்லியன் ரூபா செலவில் 2016 ஆம் ஆண்டில் பேராதனை தாவரவியல் பூங்காவின் பிரதான வாயிலிலும் சூழவும் ள்ள CCTV கமெரா தொகுதி பொருத்தப்பட்டதோடு, அதனூடாக வினைத்திறன்மிக்க வகையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- திணைக்களத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் புதிய உத்தியோகபூர்வ இல்லங்களை அமைப்பதற்கும் ஏற்கனவே காணப்படும் இல்லங்களை மற்றும் நவீனமயப்படுத்தவதற்கும் தாவரவியல் பூங்காக்கள் நிதியத்திலிருந்து நிதியேற்பாடு செய்யப்பட்டது. இதற்காக சுமார் 07 மில்லியன் ரூபாய் இவ்வருவம் செலவிடப்பட்டது.



**புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வதிவிடம்**

- பார்வையாளர்கள் இலகுவாக பூங்காவைப் பார்வையிடும் வகையில் வழிகாட்டல் கைநூலொன்று பிரசுரிக்கப்பட்டதோடு அதற்காக தாவரவியல் பூங்காக்கள் நிதியத்திலிருந்து 1.4 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

இக்கையேடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்டதோடு, ஒன்று ரூபா 20 இற்கு விற்பனை செய்யப்படுவதோடு வெளிநாட்டுப் பார்வையாளர்களுக்கு நுழைவுச் சீட்டு வழங்கும் சந்தர்ப்பத்தில் ஆங்கில வழிகாட்டிக் கைநூல் இலவசமாக வழங்கப்படுகிறது.

விற்பனை செய்யப்படுகின்ற வழிகாட்டி நூல்களின் மூலமான வருமானம் நிதியத்தின் மேலதிக வருமானமொன்றாக வரவு வைக்கப்படுகின்றது.

- இதற்கு மேலதிகமாக

  - சுமார் 05 மில்லியன் ரூபாய் செலவில் தாவரவியல் பூங்காவை சிறந்த முறையில் பேணுவதற்குத் தேவையான புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்தமை.

  - களக் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களையும் பார்வையாளர்களையும் இலகுவாக அடையாளங் கண்டுகொள்வதற்காக சுமார் 03 இலட்சம் ரூபாய் செலவில ஊழியர்களுக்கு சீருடை வழங்குவதற்கான நிதியேற்பாடு செய்யப்பட்டமை.

## ஹக்கல தாவரவியல் பூங்கா

- ஹக்கல தாவரவியல் பூங்காவில் தற்பொழுது காணப்படுகின்ற அலுவலகக் கட்டடத்தில் இடவசதி மிகவும் பற்றாக்குறையாக இருப்பதால் அதை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 2016 ஆம் ஆண்டில் நிதியத்திலிருந்து ரூபா 3.1 மில்லியன் ஒதுக்கப்பட்டது.



**மேம்படுத்தப்பட்ட அலுவலகக் கட்டடம்**

- ஹக்கல தாவரவியல் பூங்காவின் பதிய நுழைவாயில் அபிவிருத்திப் பணிகள் இவ்வருடத்தில் முன்னெடுக்கப்பட்டதோடு, இதற்காக 12.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.



**பணி பூர்த்தி செய்யப்பட்ட புதிய நுழைவுச்சீட்டுக் கருமபீடம்**

- ஹக்கல தாவரவியல் பூங்கா கஷ்டப்பிரதேசமொன்றில் அமைந்திருப்பதால் ஊழியர்களுக்கு உத்தியோக வதிவிடங்களை வழங்குவதற்கு தாவரவியல் பூங்கா நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன்படி 2016 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் செலவிடப்பட்டு உத்தியோகபூர்வ வதிவிடமொன்று நிர்மாணிக்கப்பட்டது.



**புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்**

- சீரற்றுக் காணப்பட்ட வீதித்தொகுதியின் ஒரு பகுதி பழுது பார்க்கப்பட்டதோடு அதனூடாக பார்வையாளர்கள் இலகுவாக பூங்காவை பார்வையிடுவதற்கு வசதியளிக்கப்பட்டது. இதற்காக ரூபா 3.3 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது.

- ஹக்கல தாவரவியல் பூங்கா நுவரெலியா நகரத்திலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருப்பதால் பூங்காவை பார்வையிட வருகின்ற பார்வையாளர்கள் சிறந்த உணவு, பான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான இடமொன்று பூங்கா அருகில் தற்போது இல்லை. இது குறித்து கவனம் செலுத்தப்பட்டு பார்வையாளர்களுக்கு சிறந்த தரத்திலான உணவுகளை வழங்கும் நோக்குடன் பூங்காவில் உணவகமொன்று இவ்வருடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.



உணவகக் கட்டிடத் தொகுதி

## கம்பஹா தாவரவியல் பூங்கா

- ரூபா 2.7 மில்லியன் செலவில் பொன்சாய் தாவர சேகரிப்பொன்றை கம்பஹா தாவரவியல் பூங்காவில் அமைப்பதற்கு தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.



**பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்படவுள்ள பொன்சாய் சேகரிப்பு**

- பூங்காவை அழகாக வைத்திருக்கும் நோக்குடன் புதிய மலர் வகைகள், விதைகள், உரம் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்திலிருந்து இவ்வருடம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டது.

## அவிசாவலை ஈர வலய தாவரவியல் பூங்கா

- பூங்காவின் பாதுகாப்பிற்காக சுற்றுவட்ட வேலியொன்று இவ்வருடம் அமைக்கப்பட்டதோடு, அதற்காக ரூபா 2.6 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

- முன்னைய வருடங்களைப் போல இவ்வருடத்திலும் பூங்காவின் அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியேற்பாடுகளை செய்வதற்கு தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் நடவடிக்கை எடுத்தது.

## மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா

- மின்கல மோட்டார் வாகனத்திற்கான கேள்வி அதிகரித்திருப்பதால் இவ்வருடத்தில் உலர் வலய தாவரவியல் பூங்காவிற்கு புதிய மின்கல மோட்டார்க் காரொன்று கொள்வனவு செய்யப்பட்டதோடு அதற்காக ரூபா 1.8 மில்லியன் செலவிடப்பட்டது. அதன்படி 05 மின்கலக் கார்கள் பூங்காவில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன.



உலர் வலய பூங்காவின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மின்கலக் கார்

## கனேவத்தை மூலிகைப் பூங்கா

- இவ்வருடத்தில் பூங்காவில் புதிதாக வசந்த இல்லமொன்று நிர்மாணிக்கப்பட்டது. இதற்காக சுமார் 01 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.



கனேவத்தை வன மூலிகைப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்ட சிறிய வசந்த இல்லம்

- பூங்காவில் மூலிகைக் கன்றுகளின் உற்பத்தியை அதிகரித்தல், சீரற்ற நிலையில் காணப்படும் வீதித் தொகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இவ்வருடத்தில் தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியத்திலிருந்து நிதி ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக சுமார் 03 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

## தேசிய தாவரக்கயம்

- தாவரக்கயம் இவ்வருடத்தில் நவீனமயப்படுத்தப்பட்டதோடு, அதற்காக ரூபா 2.4 மில்லியன் செலவிடப்பட்டது.



நவீனமயப்படுத்தப்பட்ட தாவரக்கயம்

## தேசிய தாவரக்கயத்தில் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட தாவரவியல் விஞ்ஞான ஆராய்ச்சி நடவடிக்கைகள்

### தாவரத் திரட்டலும் அந் நடவடிக்கைகளை முகாமை செய்தலும்

| செயற்பாடு | கையாளப்பட்ட மாதிரிகளும் |
|---|---|
| குவித்தல் | 987 |
| மீள் குவித்தல் | - |
| பழுதுபார்க்கப்பட்ட மாதிரிகள் | 5285 |
| புத்தகங்களை சுத்தப்படுத்தல் | 995 |
| நஞ்சூட்டல் | – |
| ஆழ்ந்த குளிரூட்டுகை | 1614 |
| காப்புகள் சேர்க்கப்பட்ட இனங்கள் | 330 |
| காப்புக்கள் சேர்க்கப்பட்ட, லேபல் இடப்பட்ட மற்றும் பழுதுபாாக்கப்பட்ட வகைகள் | 443 |
| சுத்தப்படுத்தப்பட்ட மாதிரிகள் | 28696 |
| அழுத்துதல் | 1276 |
| வகையின உரைகளுக்காக தட்டச்சு செய்யப்பட்ட லேபல்கள், மாதிரிகள் மற்றும் இன அட்டைகள் | 1824 |
| குறிச்சொல் அட்டைகளைத் தயாரித்தல் | 2347 |

**களப்பயணங்களின் போதான தாவரச் சேகரிப்பு பற்றிய விபரங்கள் (தாவரக்கயத்தின் மேம்பாடு)**

| சேகரிக்கப்பட்ட வகைகள் | கள ஆராய்ச்சி /ஏனைய மூலங்கள் | உறுதிப்படுத்தப்பட்டு, சேர்க்கப்பட்டவை | மாதிரிகளின் எண்ணிக்கையும் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களும் |
|---|---|---|---|
| ***வித்துமூடியுளிகள்*** | குருலுகெலே | 17 | தேசிய தாவரக்கயம் |
| | அம்பாந்தோட்டை | 27 | தேசிய தாவரக்கயம் |
| | வஸ்கமுவ | 17 | தேசிய தாவரக்கயம் |
| | கல்வேய்ஸ் லாண்ட் | 40 | தேசிய தாவரக்கயம் |
| | | | |

| சேகரிக்கப்பட்ட வகைகள் | கள ஆராய்ச்சி /ஏனைய மூலங்கள் | உறுதிப்படுத்தப்பட்டு, சேர்க்கப்பட்டவை | மாதிரிகளின் எண்ணிக்கையும் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களும் |
|---|---|---|---|
| | சுண்டிக்குள வனவிலங்கு சரணாலயம், கிளிநொச்சி மாவட்டம் | 111 | தேசிய தாவரக்கயம் |
| | மறிச்சிக்கட்டு கடற்கரையிலிருந்தான கடல் தாவரங்கள் - சமர்ப்பிக்கப்பட்டவை | 54 | தேசிய தாவரக்கயம் |
| | ஹுருலு சுற்றாடல் வலய கள ஆராய்ச்சிச் சுற்றுலா | 36 | தேசிய தாவரக்கயம் |
| | ஹபரண - கிரிதலே கள ஆராய்ச்சிச் சுற்றுலா | 39 | தேசிய தாவரக்கயம் |
| | ஹோட்டன் சமவெளி | 56 | தேசிய தாவரக்கயம் |
| ***வித்துமூடியுளிகள்*** | முல்லைத்தீவு | 59 | தேசிய தாவரக்கயம் |
| | ஏனைய வவுச்சர் மாதிரிகள் | 09 | தேசிய தாவரக்கயம் |
| | களுகங்கை – மொறகஹகந்தை | 128 | தேசிய தாவரக்கயம் |
| | பீதுருதலாகல | 10 | தேசிய தாவரக்கயம் |
| | அலகல்ல | 16 | தேசிய தாவரக்கயம் |
| | மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தின் ஏனைய இடங்கள் | 64 | தேசிய தாவரக்கயம் |
| | கம்பஹா | 05 | தேசிய தாவரக்கயம் |
| | ரிட்டிகல | 01 | தேசிய தாவரக்கயம் |
| | நமுனுகுல | 40 | தேசிய தாவரக்கயம் |
| | நக்கில்ஸ் பாதுகாப்புப் பிரதேசம், மாத்தளை, பிடவலபத்தனை | 13 | தேசிய தாவரக்கயம் |
| | அம்பகமுவ | 14 | தேசிய தாவரக்கயம் |

| சேகரிக்கப்பட்ட வகைகள் | கள ஆராய்ச்சி /ஏனைய மூலங்கள் | உறுதிப்படுத்தப்பட்டு, சேர்க்கப்பட்டவை | மாதிரிகளின் எண்ணிக்கையும் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களும் |
|---|---|---|---|
| | புனிதப் பாத மலைப் பகுதி | 26 | தேசிய தாவரக்கயம் |
| | பேராசிரியர். டீ. யகந்தவெல அவர்களினால் அபனோஜிதன் வகைகள் கையளிக்கப்படுதல் | 28 | தேசிய தாவரக்கயம் |
| | கிரிபத்கல்ல | 08 | தேசிய தாவரக்கயம் |
| | இரத்தினபுரி | 03 | தேசிய தாவரக்கயம் |
| | குருநாகல் | 10 | தேசிய தாவரக்கயம் |
| **மொத்தம்** | | **831** | |
| **பாசித் தாவரங்கள்** | பல்வேறு இடங்களிலிருந்து | **175** | தேசிய தாவரக்கயம் |
| **பன்னத் தாவரங்கள்** | பல்வேறு இடங்களிலிருந்து | **212** | தேசிய தாவரக்கயம் |
| | **முழு மொத்தம்** | **1218** | |

- **இடம்பெற்ற செயலமர்வுகள்**

  தாவரங்களை இனங்காணுதல் தாவரக்கயத்தின் பராமரிப்பு மற்றும் தாவரப் பாதுகாப்பு பற்றிய 06 செயலமர்வுகள் இடம்பெற்றதோடு அவற்றில் 476 பேர் கலந்துகொண்டனர்.

- **பின்வரும் விடயங்கள் தொடர்பில் பார்வையாளர்களுக்கு அறிவூட்டப்பட்டன.**

| **வகை** | **அடையாளங் காணப்பட்ட மாதிரி வகையினங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| வித்துமூடியுளிகள் | 1812 |
| பன்னத் தாவரங்கள் | 218 |
| பாசித் தாவரங்கள் | 130 |
| பூச்செடியியல் தகவல் தொடர்பாக விடையளிக்கப்பட்ட கடிதங்கள், மின்னஞ்சல்கள் என்பவற்றின் எண்ணிக்கை | 302 |

- நீதிமன்ற செயற்பாடுகள் 33 க்காக 249 தாவர அடையாளங் காணல் நடடிக்கைகள் இடம்பெற்றன.

- 21 தாவரவியல் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக நாட்டிலுள்ள வனப் பாதுகாப்பு சரணாலயங்களுக்கு அவதானிப்பு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- தாவரவியல் விஞ்ஞான ஆராய்ச்சி நடவடிக்கைகளோடு தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகள் தொடர்பில் பார்வையாளர்களை அறிவூட்டுவதற்காக போஸ்டர் மற்றும் வெளியீடுகள் பிரசுரிக்கப்பட்டன.

## கல்வி மற்றும் பயிற்சி நிலையம்

கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தினூடாக பூங்கா அலங்காரம் மற்றும் பூச்செடிச் செய்கைப் பயிற்சி பற்றிய பாடநெறிகள் நடாத்தப்படுவதோடு அதற்கான நிதியை ஒதுக்குவதற்கு தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் நடடிவக்கை எடுத்து வருகின்றது.

## பூச்செடிச் செய்கைப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்

- பூச்செடிச் செய்கைப் பிரிவுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் உபகரணங்களை கொள்வனவு செய்வது போன்றவற்றுக்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டது.
- பார்வையாளர்களுக்கு விரிவுரை மண்டபமொன்றை நிறுவதற்காக இவ்வருடம் ரூபா 2.6 மில்லியன் ஒதுக்கப்பட்டது.



நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள உதவிப்பணிப்பாளர் அலுவலகத்தில் தாபிக்கப்பட்ட கேட்போர்கூடம்

- இலங்கை முழுவதும் அமைந்துள்ள பூச்செடிச் செய்கையாளர்களுக்கு உதவும் முகமாக பூச்செடிச் செய்கைக் கண்காட்சிகளை நடாத்துவதற்கு வசதியளிப்பதற்காக பூச்செடிச் செய்கைப் பிரிவு நடவடிக்கை எடுத்ததோடு அதற்குத் தேவையான நிழல் இல்லங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் நடவடிக்கை எடுத்தது. இதற்காக சுமார் 05 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

- ரூபா 2.9 மில்லியன் செலவில் பூச்செடிச் செய்கைப் பிரிவின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மின்சார இணைப்பை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**பூச்செடியியல் அலகினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சிலவற்றின் விபரம் வருமாறு:**

Philodendron erubescens cv. "Gold" தாவரத்தின் அடிப்பாகத்தை நீக்கி BAP மற்றும் IAA இடுவதன் மூலம் பக்க உறிஞ்சிகளின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான ஆய்வு செய்யப்பட்டது. 250 mg/ I BAP + mg/ I IAA மற்றும் 250 mg/ I BAP + 125 mg/ I IAA இடுவதன் மூலம் உயர்ந்த பட்ச பக்க உறிஞ்சிகள் மற்றும் இலைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

மல்லிகைப் பூக்களை (Jasminum grandiflorum) அறுவடைக்குப் பின்னர் நீண்ட காலத்துக்குப் பேணும் பொருட்டு அறுவடைக்குப் பின்னரான பல்வேறு தொழில்நுட்ப முறைகளது தாக்கம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. மல்லிகைப்பூ மொட்டுக்களை 10° C அல்லது 13°C வெப்பநிலையில் முன் குளிரூட்டி போரிக் அமிலத்தின் 4% கலவையில் ஊற வைத்து 150 அல்லது 300 கேஜ் தடிப்பான LDPE பொலித்தீன் உறைகளில் பொதியிடுவதன் மூலம் வெண்ணிறமும் பசுமையான தோற்றமும் மாறாமலும் பாரம் குறையாமலும் 04 நாட்கள் வரை குளிரூட்டி நிலைமையின் கீழ் பாதுகாக்கப்பட முடியும் எனக் கண்டறியப்பட்டது.

ஓக்கிட் பூச்செடிகளை இழைய உருவாக்கம் செய்தற்கான செலவு குறைந்த முறைமைகளைக் கையாள்வது தொடர்பான ஆய்வொன்று செய்யப்பட்டது. சவ்வரிசி, ரவை, சோளம் மாவு, Ms மற்றும் Knc ஆகியனவற்றை வளர்ப்பு ஊடகத்தைக் கனமாக்கும் மாற்றீடுகளாகப் பயன்படுத்த முடியும் எனக் கண்டறியப்பட்டது. மழை நீரையும் குழாய் நீரையும் மாற்றீடுகளாகப் பயன்படுத்த முடியும் எனவும் கண்டறியப்பட்டது.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய அந்தூரியம் கலப்பினங்களை இழைய உருவாக்கம் செய்வதற்கான புதிய, சிறந்த முறைமைகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் ஒரு உறிஞ்சியிலிருந்து 25 உறிஞ்சிகள் வீதம் பெற்றுக்கொள்வதற்கான செயற்றிறன் மிக்க இழைய உருவாக்க முறைமையாக ½ Ms 0.1 mg/ I 2, 4 D, 1.0 mg/ I BAP, 720 mg/ I NH4 NO3 ஐச் சேர்ப்பதும் 16 h ஒளி நிலைமையை வழங்குவதும் பொருத்தமானது எனக் கண்டறியப்பட்டது.

உலர் வலயத்தில் பூச்செடியியல் தொழில் துறையில் நபர்களை ஈடுபடுத்துவதற்கான இயலுமை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. உலர் வலயத்துக்கு பூச்செடியியல் தொழில் துறை பொருத்தமானது என்றும் அதனை முழு இலங்கைக்கும் விரிவாக்கம் செய்ய முடியும் எனவும் கண்டறியப்பட்டது.

ஒளி நிலைமைகளை மாற்றுவதன் மூலம் அலங்காரத் தாவரங்களின் இலைகளில் அந்தோசயனின் சேர்வது பற்றி ஆய்வு செய்யப்பட்டது. Alternanthera spp. மற்றும் Coleus ஆகிய தாவரங்களில் அதிக வேகத்தில் அந்தோசயனின் சேர்வது கண்டறியப்பட்டது.

## நிதியத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சுருக்கம்

| | விடயம் | மதிப்பீடு (ரூபா) | 2016 -12-31 திகதிய மொத்த செலவு (ரூபா) | எஞ்சிய தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | நிதியத்தின் செலவு | 430,000.00 | 428,853.50 | **1,146.50** |
| 2 | தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கான செலவு | 19,475,000.00 | 19,474,793.73 | **206.27** |
| 3 | பேராதனை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவு | 45,900,000.00 | 45,880,606.40 | **19,393.60** |
| 4 | ஹக்கலை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவு | 32,350,000.00 | 32,347,756.24 | **2,243.76** |
| 5 | கம்பஹா தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவு | 3,170,000.00 | 3,160,542.70 | **9,457.30** |
| 6 | கனேவத்த வன மூலிகைப் பூங்காவின் அபிவிருத்திச் செலவு | 3,012,000.00 | 3,011,024.10 | **975.90** |
| 7 | தேசிய தாவரக்கயத்தின் அபிவிருத்திச் செலவு | 4,715,000.00 | 4,713,947.07 | **1,052.93** |
| 8 | கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் அபிவிருத்திச் செலவு | 915,000.00 | 913,661.76 | **1,338.24** |
| 9 | பூச்செடிச் செய்கைப் பிரிவின் அபிவிருத்திச் செலவு | 22,050,000.00 | 22,045,637.30 | **4,362.70** |
| 10 | நாரஹேன்பிட ''சுவஹஸ் மல் செவன'' அலகின் அபிவிருத்திச் செலவு | 1,290,000.00 | 1,289,899.80 | **100.20** |
| 11 | அவிசாவலை ஈர வலைய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவு | 4,800,000.00 | 4,799,285.50 | **714.50** |
| 12 | மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவு | 1,893,000.00 | 1,891,687.50 | **1,312.50** |
| | **மொத்தம்** | **140,000,000.00** | **139,957,695.60** | **42,304.40** |

ஆர்.எம்.டீ.பீ. மீகஸ்முல்ல
தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின்
தலைவர் மற்றும் வலுவாதார அபிவிருத்தி
மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் செயலாளர்.

கே.என். யாபா
தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை
நிதியத்தின் செயலாளர் மற்றும்
தேசிய தாவரவியல் பூங்காக்கள்
திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்